**செய்தி வெளியீடு எண்:145** **நாள்–25.2.2009**

**ஆண்டிப்பட்டி அருகே ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி!**

**முதலமைச்சர் கலைஞர் ஆணை!**

**தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியம், ராஜதானி கிராமத்தில் தோட்டவேலை செய்துகொண்டிருந்த அழகம்மா என்பவரின் 6 வயதுடைய மகன் மாயி இருளன், அங்கு விளையாடிக்கொண்டிருந்தபோது, விவசாயத்திற்காகத் தோண்டப்பட்டிருந்த 400 அடி ஆழமுடைய ஆழ்துளை கிணற்றில் தவறிவிழுந்து உயிரிழந்த துயரசம்பவம் அறிந்து மிகுந்த வேதனையடைந்துள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மகனை இழந்து தவிக்கும் பெற்றோருக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளதுடன், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து அச்சிறுவனின் பெற்றோருக்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியுதவி வழங்கிட ஆணையிட்டுள்ளார்.**

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9